**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், செங்கல்பட்டு**

**OS.No.148/2021 P.W.1**

(சாட்சிக்கு திரு.V.பிரதாப், உதவியாளர் அவர்களால் சாட்சி பிரமாணம் செய்யப்பட்டது)

| | |
|---|---|
| பெயர் | ரகு |
| த/பெ. | வடிவேல் |
| வயது | 56 |
| வசிப்பிடம் | எண்.2/73, பாரதியார் தெரு, நாவலூர் கிராமம், திருப்போரூர் தாலுக்கா, செங்கல்பட்டு. |
| தொழில் | நிலம் வாங்கி, விற்கும் தொழில் |

**முதல் விசாரணை** 23.01.2026

நான் இந்த வழக்கில் வாதி. இன்று இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். 26.06.1959 தேதியிட்ட திருநாவுக்கரசு, தட்சணாமூர்த்தி பெயரில் எழுதிக் கொடுத்த கிரய பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1. 24.11.2005 தேதியிட்ட பாஸ்கரன் என்பவர் பெயரில் தட்சணாமூர்த்தி என்பவர் எழுதிக் கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரத்தின் அசல் வா.சா.ஆ.2. 18.06.2018 தேதியிட்ட பாஸ்கரன், ராஜன் என்பவருக்கு எழுதிக் கொடுத்த பொது அதிகார பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.3. 25.06.2018 தேதியிட்ட பாஸ்கரன் பெயரில் ஏற்பட்ட வீட்டு வரி ரசீது நீதிமன்ற சான்றிட்ட நகல் வா.சா.ஆ.4. 14.05.2019 தேதியிட்ட பாஸ்கரன் பெயரிலுள்ள மின்கட்டண ரசீது நீதிமன்ற சான்றிட்ட நகல் வா.சா.ஆ.5. பாஸ்கரன் பெயரில் ஏற்பட்ட மின் அட்டையின் நீதிமன்ற சான்றிட்ட நகல் வா.சா.ஆ.6. 22.11.2018 தேதியிட்ட தாழம்பூர் காவல் நிலையத்தில் குற்ற எண்.612/2018ல் பிரதிவாதிகள் மீது பதிவு செய்யப்பட்ட அச்சு முதல் தகவல் அறிக்கையின் நீதிமன்ற சான்றிட்ட நகல் வா.சா.ஆ.7. 12.10.2020 தேதியிட்ட வாதி, பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர்

அறிவிப்பின் அலுவலக நகல் வா.சா.ஆ.8. 03.11.2010 அன்று 1, 2 பிரதிவாதிகள் மேற்படி அறிவிப்பினை பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகை அட்டை அசல் வா.சா.ஆ.9



வரிசை (2 எண்ணிக்கை). 19.10.2020 தேதியிட்ட பிரதிவாதிகள், வாதிக்கு அனுப்பிய பதில் அறிவிப்பின் அலுவலக நகல் வா.சா.ஆ.10. 12.10.2020 தேதியிட்ட வாதி, வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் உதவி நிர்வாக பொறியாளர் அவர்களுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் வா.சா.ஆ.11. மேற்கண்ட இருவரும் 15.10.2020ல் அறிவிப்பை பெற்றுக் கொண்டதை காட்டும் ஒப்புகை அட்டைகள் வா.சா.ஆ.12 வரிசை (2 எண்ணிக்கை). 06.05.2023 தேதியிட்ட பாஸ்கரன், ராஜன் என்பவருக்கு வழங்கிய பொது அதிகார ரத்து பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.13. 06.05.2023 தேதியிட்ட பாஸ்கரன், ரகு என்பவருக்கு வழங்கிய பொது அதிகார பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.14.

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

(பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)